# கொரிய தொழிலதிபர்கள் சந்திப்பு தமிழகத்தில் முதலீட்டுக்கு வாய்ப்பு

– நமது நிருபர் –

தமிழகம் வந்துள்ள, தென்கொரிய தொழிலதிபர்கள் குழு, தமிழக அரசு அதிகாரிகள், தமிழக தொழில் துறையினரை சந்தித்து பேசியது.

தென்கொரியாவில் இருந்து, பூசான் பொருளாதார மேம்பாட்டு அமைப்பைச் சேர்ந்த, தொழில் பிரதிநிதிகள் அடங்கிய குழு, நேற்று சென்னை வந்தது. அவர்கள், உற்பத்தி சார்ந்த பல நிறுவனங்களை நடத்தி வருகின்றனர். அக்குழுவினர், தென்கொரிய துாதரக அதிகாரி, கியூங்கசூ கிம் முன்னிலையில், தமிழக தொழில் துறை கூடுதல் செயலர் சண்முகமும் உள்ளிட்ட, அரசு அதிகாரிகளை சந்தித்து ஆலோசித்தனர்.

இதில், இந்திய தொழிலக கூட்டமைப்பின், தென் மாநில பிரதிநிதிகள் மற்றும் தமிழக சிறு, குறுந் தொழில் நிறுவன பிரதிநிதிகளும் பங்கேற்றனர்.

இது குறித்து, தொழில் துறை அதிகாரிகள் கூறியதாவது:

தென்கொரிய தொழிலதிபர்களிடம், தமிழகத்தில் உள்ள முதலீட்டுக்கு சாதகமாக சூழல்கள், சலுகைகள் குறித்தும், அரசு தரப்பில் தெரிவிக்கப் பட்டது. பின், தமிழக தொழில் நிறுவன அதிகாரிகளை, அவர்கள் தனித்தனியாக சந்தித்தனர். தமிழகத்தில், தென்கொரிய தொழிலதிபர்கள், விரைவில் முதலீடு செய்வர்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.